செ.வெ.எண்: 341 நாள்: 10.08.2021

## பத்திரிக்கை செய்தி

தற்போது நீலகிரி மாவட்டத்தில் கொரோனா தொற்று பரவல் தடுப்பு நடவடிக்கைகள் மற்றும் கட்டுப்பாடுகளின் விளைவாக கொரோனா பரவலின் தாக்கம் சற்று குறைந்துள்ளது. மாவட்டத்தில் தடுப்பூசி செலுத்தும் பணிகள் முடுக்கிவிடப்பட்டு அனைத்து பகுதிகளுக்கும் எவ்வித தட்டுப்பாடுகளுமின்றி தடுப்பூசிகள் பகிர்ந்தளிக்கப்பட்டு தினசரி அனைத்து பகுதிகளிலும் தடுப்பூசிகள் சீரான அளவில் செலுத்தப்பட்டு வருகின்றன.

ஆகவே, நீலகிரி மாவட்டத்திலுள்ள அனைத்து தகுதிவாய்ந்த மக்களுக்கும் எவ்வித விடுபாடும் இன்றி 100% தடுப்பூசி செலுத்தும் இலக்குடன் மாவட்ட நிர்வாகம் முழுவீச்சில் நடவடிக்கை எடுத்து வருகிறது. இந்நிலையில் பொதுமக்கள் அதிகளவில் வந்து செல்லும் அத்தியாவசிய கடைகள், சந்தை பகுதிகள், வணிக வளாகங்கள், உணவு விடுதிகள், தங்கும் விடுதிகள், சலூன் கடைகள், மற்றும் பிற இடங்களில் பணியாற்றும் பணியாளர்கள் மற்றும் அதன் உரிமையாளர்கள், விவசாய தொழிலாளர்கள், கேரட் கழுவும் எந்திரங்களில் பணியாற்றும் பணியாளர்கள், தேயிலை எஸ்டேட் தொழிலாளர்கள் மற்றும் பிற அமைப்பு சாரா தொழிலாளர்கள் ஆகியோர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் சிறப்பு முகாம்கள் அமைக்கப்பட்டு தடுப்பூசிகள் செலுத்தப்பட்டன.

இருப்பினும் மாவட்ட நிர்வாகம் அனைத்து வசதிகள் செய்தும் மேற்படி பணியாளர்களில் ஒரு சிலர் நாளது தேதிவரை தடுப்பூசி செலுத்தாமல் பணியாற்றுவதாக மாவட்ட நிர்வாகத்திற்கு தகவல்கள் வரப்பெற்றுள்ளது. இவர்கள் மூலம் பொதுமக்களுக்கு மீண்டும் தொற்று பரவும் அபாயம் உள்ளதால் இதனை தடுக்கும் பொருட்டு நீலகிரி மாவட்டத்தில் இயங்கும் அனைத்து வகையான அத்தியாவசியக் கடைகள், சந்தை பகுதிகள், வணிக வளாகங்கள், உணவு விடுதிகள், தங்கும் விடுதிகள், சலூன் கடைகள் மற்றும் பிற இடங்களில் பணியாற்றும் பணியாளர்கள் மற்றும் அதன் உரிமையாளர்கள், விவசாய தொழிலாளர்கள், கேரட் கழுவும் எந்திரங்களில் பணியாற்றும் பணியாளர்கள், தேயிலை எஸ்டேட் தொழிலாளர்கள் மற்றும் பிற அமைப்பு சாரா தொழிலாளர்கள் அனைவரும் கண்டிப்பாக தடுப்பூசி செலுத்திய பின்னரே பணிபுரிய அனுமதிக்க வேண்டும்.

இதை சம்பந்தப்பட்ட வணிக நிறுவனங்களின் உரிமையாளர்கள் மற்றும் தொழிற்சாலை நிர்வாகங்கள் உறுதி செய்ய வேண்டும். இதனை சம்பந்தப்பட்ட வருவாய், உள்ளாட்சி மற்றும் தொழிலாளர் நலத்துறையினர் ஆய்வு செய்து நடவடிக்கை எடுக்கவும் உத்தரவிடப்படுள்ளது. எனவே, பொதுமக்கள் அனைவரும் மாவட்ட நிர்வாகத்தின் கொரோனா தடுப்பு நடவடிக்கைகளுக்கு முழு ஒத்துழைப்பு வழங்குமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஜெ.இன்னசென்ட் திவ்யா இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், நீலகிரி மாவட்டம்.